முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
O.S. No. 216 / 2024

<u>பி.வா.சா.1 / லெட்சுமி /10.06.2026</u>

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

என்னுடைய கைபேசி எண் 9842678807 ஆகும். வாதி மற்றும் எனது தந்தையின் கைபேசி எண் என்னவென்று கேட்டால் என் தந்தை உயிருடன் இருக்கும்வரை அவருக்கென்று கைபேசி இருந்தது. அந்த கைபேசியின் எண் எழுதி வைத்துள்ளேன். தற்போது எனக்கு நினைவில் இல்லை. பி.வா.சா.ஆ.6 ஆதார் அடையாள அட்டை எந்த வருடம் வழங்கப்பட்டது என்றால் வருடம் ஞாபகம் இல்லை. என் தந்தை இறப்பதற்கு முன்பு ஆதார் அடையாள அட்டை வழங்கப்பட்டது தோராயமாக எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.6 என் தந்தையின் ஆதார் அடையாள அட்டையில் என் தந்தையின் கைபேசி எண் இல்லை சரிதான். காரணம் அவரது அலைபேசி பழுதடைந்ததால் எனது அலைபேசி எண் அதில் பதிவு செய்யப்பட்டது. அதில் தான் என் தந்தை அடிக்கடி பேசி வந்தார். அந்த பழுதடைந்த அலைபேசியை சரிசெய்தோமா என்றால் இன்றுவரை சரிசெய்யவில்லை. அவ்வாறு அந்த அலைபேசி எந்த வருடம் பழுதடைந்தது என்று கேட்டால் வருடம் ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் என் தந்தையின் அலைபேசி எண் என்று 9524456887 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த எண்ணுக்குண்டான அலைபேசி தான் பழுதடைந்திருந்ததா என்றால் எண் தற்போது ஞாபகம் இல்லை. வீட்டில் எழுதி வைத்துள்ளேன், அதுவாக இருக்கலாம். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 9524456887 என்ற எண்ணை ஏன் பி.வா.சா.ஆ.6 ஆதார் அட்டையில் குறிப்பிடவில்லை என்று கேட்டால் ஆதார் அட்டை சம்மந்தமாக மெசேஜ் வரும் என்பதால் என்னுடைய அலைபேசி எண்ணை பி.வா.சா.ஆ.6 ஆவணத்திற்காக கொடுத்திருந்தேன். வாதி மற்றும் என் தந்தைக்கு தெரியாமல் என் அலைபேசி எண்ணை பி.வா.சா.ஆ.6 ஆவணத்திற்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அலைபேசிமெசேஜ் வந்தால் என் தகப்பனாரால் எப்படி படிக்க முடியும் என்பதால் எனது அலைபேசி எண்ணை கொடுத்திருந்தேன். அவரது கைபேசி பழுதடைந்திருந்ததால் அவ்வாறு கொடுக்கப்பட்டது. கைபேசி பழுதடைந்திருந்தாலும் என் தந்தையின் சிம் கார்டு உபயோகத்தில் இருந்திருந்தது என்றால் மாதத்திற்கு ஒரு முறை அந்த சிம்கார்டை உபயோகம் செய்வார். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் என் தந்தையின் முகவரி

என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. படித்து பார்த்தால் தான் சொல்ல முடியும். சார்பதிவாளர் அலுவலகத்தில் பி.வா.சா.ஆ.3 உயில் பதிவு செய்ய என் தகப்பனாரின் அடையாள அட்டையாக என்ன ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. படித்து பார்த்தால் தான் சொல்ல முடியும். என் தந்தைக்கு திருப்பூர் கருவம்பாளையம் பெடரல் வங்கி கிளையில் வங்கி கணக்கு இருந்தது. அந்த வங்கி கணக்கில் என் தந்தையின் முகவரியாக என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் முகவரி எனக்கு தெரியாது. ஆனால் வங்கி கணக்கு இருப்பதாக என் தகப்பனார் சொல்லி எனக்கு தெரியும். அந்த வங்கி கணக்கில் என் தந்தையின் காசோலையை கொண்டு நான் பணம் எடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தையின் நிரந்தர முகவரி கதவு எண்.2/9, இடுவாய் கிராமம் என்றால் சரிதான். கடைசி காலகட்டத்தில் அந்த முகவரியில் அவர் வசிக்கவில்லை. 15.10.2020 ம் தேதி காலகட்டத்தில் என் தந்தை எந்த முகவரியில் இருந்தார் என்றால் எனது முகவரியில் வசித்து வந்தார். அவ்வப்போது தோட்டத்திற்கும் கோவிலுக்கும் சென்று வருவார். 15.10.2020 ம் தேதிய காலகட்டத்தில் எனது தந்தைக்கு வயது 94 ஆக இருக்குமா என்று கேட்டால் அவருக்கு பிறப்பு சான்றிதழ் இல்லை. அவர் அவ்வபோது வயதை மாற்றி கூறியுள்ளார். பி.வா.சா.ஆ.6 ஆதார் அட்டையில் என் தந்தையின் பிறந்த தேதி என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் தந்தைக்கு கண்ணில் அறுவை சிகிச்சை நடந்ததா என்றால் ஆமாம். கேட்ராக்ட் அறுவை சிகிச்சை நடந்தது. எந்த வருடம் அவ்வாறு அறுவை சிகிச்சை நடந்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை. ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். 2018 ம் வருடம் என் தந்தைக்கு வலிப்பு ஏற்பட்டு கீழே விழுந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு வலிப்பே வந்தது இல்லை. 2018 ம் வருடம் என் தந்தை டாக்டர்.எம்.குணசேகரன், மூளை மற்றும் நரம்பியல் நிபுணரிடம் சிகிச்சை எடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. 2018 ம் வருடம் என் தந்தைக்கு வலிப்பு ஏற்பட்டு கீழே விழுந்த காரணத்தால் அவருக்கு கால் மற்றும் தலையில் அடிபட்டு காயம் ஏற்பட்டது என்றும் அதனால் அவரால் நடக்க முடியாமல் அவதிபட்டார் என்றும் மேலும் தலையில் அடிபட்ட காரணத்தால் நரம்பியல் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார் என்றும் மேலும் என் தகப்பனாருக்கு மூளைக்கு செல்லும் நரம்பில் சரிவர இரத்த ஓட்டம் இல்லாததாலும் அவருக்கு நினைவாற்றல் குறைவாகவும் அதிக ஞாபக மறதியினாலும் சரியான நபர்கள் யாரென்று அடையாளம்

காண முடியாமலும் நல்லது எது கெட்டது எது என்று பகுத்தறிய முடியாத நிலையிலும் அவர் மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர் நல்ல மனநிலையில் ஆரோக்கியமாக தான் இருந்தார். 2018 ம் வருடம் மேற்கண்டவாறு அடிப்பட்ட காரணத்தால் என் தந்தைக்கு கைநடுக்கம் இருந்தது என்று சொன்னால் 2018 ம் ஆண்டு அவ்வாறு கைநடுக்கம் இல்லை. கடைசிவரை அவருக்கு கைநடுக்கம் கிடையாது. எழுதுவதற்கு மட்டும் அவருக்கு வயோதிகம் காரணமாக கைநடுக்கம் இருந்தது. 2018 ம் ஆண்டில் என் தந்தை கீழே விழுந்து அடிப்பட்டதால் தான் நரம்பு பிரச்சனை ஏற்பட்டு கைநடுக்கம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை எந்த ஆவணமாக இருந்தாலும் கையொப்பம் செய்வது தான் வழக்கம் என்றால் கையொப்பம் செய்வார். ஆனால் கடைசியாக அவருக்கு எழுதுவதில் கைநடுக்கம் இருந்தது. 11.08.2006 தேதியிட்ட வா.சா.ஆ.1 பாக சாசன ஆவணத்திலும் மற்றும் 10.11.2008 தேதியிட்ட வா.சா.ஆ.2 கிரய பத்திரத்திலும் என் தந்தை கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மோகன்ராஜ் த/பெ பழனிசாமி, 83, காமராஜ் நகர் 2 வீதி, திருப்பூர் என்பவரை யாரென்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தற்போது தெரியும். என் தந்தை சம்மந்தப்பட்ட மருத்துவ ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் மருத்துவ பதிவேடு எதுவும் கிடையாது காரணம் அவர் நல்ல ஆரோக்கியமாக தான் இருந்தார். கண் அறுவை சிகிச்சைக்கு எடுத்து கொண்ட மருத்து குறிப்பு உள்ளது. என் தந்தைக்கு மருத்துவ ஆவணங்கள் இருந்தது என்றும் நான் அவருக்கு தெரியாமல் அந்த ஆவணங்களை எடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. பிரபாகரன் த/பெ பச்சையப்பன், எல்லோரா தோட்டம், புதூர் பிரிவு, தாராபுரம் ரோடு, திருப்பூர் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் என் அப்பாவிற்கு மிகவும் நெருக்கமானவர் ஆவார். எனது மற்றும் மேற்படி பிரபாகரன் என்பவரின் முகவரி எல்லோரா கார்டன் என்று சொன்னால் சரிதான். அவர் நான் வசிக்கும் வீதிக்கு சற்று தள்ளி வசித்து வருகிறார். எனது பிரமாண வாக்குமூலத்தின் பத்தி எண்.9 ல் 15.10.2020 தேதியிட்ட என்னால் சொல்லப்படும் உயில் ஆவணத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதாக சொல்லி எனது இளைய மகள் சுந்தராம்பாள் அவர்களுக்கு என் சொத்துக்களில் சில சொத்தை விற்பனை செய்து அந்த தொகைகளும் மேற்படி சுந்தராம்பாளுக்கு கொடுத்ததாக சொல்லியுள்ள விவரம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு என்ன சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டது எந்த தேதியில்

விற்பனை செய்யப்பட்டது போன்ற விவரங்களை பி.வா.சா.ஆ.3 ஆவணத்திலோ, எனது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு சொத்துக்களை விற்பனை செய்தததாக சொல்வதை குறித்தும் அந்த தொகையை வாதிக்கு கொடுத்ததாக சொல்வது குறித்தும் சொல்லியுள்ள விவரங்கள் பொய் என்பதால் அதுகுறித்து எந்தவிதமான ஆவணங்களின் விவரங்களையும் என்னுடைய சாட்சியத்திலும், பி.வா.சா.ஆ.3 ஆவணத்திலும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகளுக்கு 03.12.2008 ம் தேதி திருமணம் ஆனது. என் மகளின் திருமணத்திற்கு 20 நாட்களுக்கு முன்பு தான் வா.சா.ஆ.2 ல் கண்டுள்ள சொத்து விற்பனையானது என்றால் சரிதான். நான், என் தந்தை, வாதி மற்றும் என்னுடைய மகன், மகள் மற்றும் வாதியின் மகன்கள் அனைவரும் கையொப்பம் செய்து தான் வா.சா.ஆ.2 கிரயம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். என் மகளின் திருமண செலவிற்காக தான் நான் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் வா.சா.ஆ.2 ன் படி அதில் கண்டுள்ள சொத்துக்கள் விற்கப்பபட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பாக பிரிவினை செய்ய கோரி வாதி அனுப்பிய வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் எழுத்துப்பூர்வமாக எந்த பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். ஆனால், வாய்மொழியாக நேரில் சந்தித்து சொன்னேன். வா.சா.ஆ.5 அறிவிப்பில் என் தகப்பனார் தாவா சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் 03.05.2021 ம் தேதியன்று காலமாகிவிட்டதாக அதில் குறிப்பிப்பட்டுள்ளது என்றால் சரிதான். 03.05.2021 ம் காலகட்டம் கோவிட் தொற்றுநோய்– 2019 காலகட்டம் என்றால் சரிதான்.

(நேரமின்மையின் காரணமாக இருதரப்பு சம்மதத்துடன் குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2026.06.10 19:31:56 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.